டெரிக் பிரின்ஸ்

# மனந்திரும்புதல் வழியாய் விசுவாசம் வரை

*Derek Prince Ministries - India*

**"MANANTHIRUMBUTHAL VAZHIYAI VISUVASAM VARAI"**

© 2010 Derek Prince Ministries - International

Printed by Derek Prince Ministries

All rights reserved.

TAM/5000/0923/LOP

ISBN: 978-93-92947-17-9

"THROUGH THE REPENTANCE TO FAITH" (Tamil)

"**MANANTHIRUMBUTHAL VAZHIYAI VISUVASAM VARAI**"

Published by permission in the Tamil language.

No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or by means of any information storage and retreival system, without permission in writing from the publisher.

For orders & other enquiries please contact :

**DEREK PRINCE MINISTRIES - INDIA**
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in

Phone : 00-91-98430 55414 / 95855 38201/03

Derek Prince
MINISTRIES INDIA

# மனந்திரும்புதல் வழியாய் விசுவாசம் வரை

ஒரு கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அடித்தளம் அமைக்க ஆரம்பிப்பதில், நம்முடைய பங்களிப்பாக விசுவாசம் தேவை என்பதைப் பெரும்பாலான மக்கள் உணர்ந்துள்ளனர். ஆனால் நாம் விசுவாசத்தை எவ்வாறு பெறுவது? இந்த அடிப்படை, அடிக்கல் இடுவதற்கு தேவனுடைய வார்த்தையில் என்ன ஏற்பாடுகள் உள்ளன?

விசுவாசத்திற்கு வர, மனந்திரும்புதலின் வழியைத் தவிர வேறு வழி இல்லை. அங்கே கொண்டு செல்வதாக கூறும் வேறு எந்த வழியும் வஞ்சகமானது. உண்மையான விசுவாசம் மனந்திரும்புதல் இல்லாமல் சாத்தியமே இல்லை.

## அஸ்திபாரம்

இந்த சிறு புத்தகத் தொடரில், எபிரேயர் 6:1–2–ல் வழங்கப்பட்டுள்ள நற்செய்தியின் மைய சத்தியங்களை நாம் பார்த்து வருகிறோம். இது அந்தப் போதனையின் மூன்றாவது பகுதி. இந்தப் பகுதியைத் தொடங்க, நான் திரும்பவும்,

இதுவரை நீங்கள் கற்றுக்கொண்டதை நினைப்பூட்ட விரும்புகிறேன்.

முதலாவது, கிறிஸ்தவ நம்பிக்கையின் தனிப்பட்ட அஸ்திபாரம் இயேசு கிறிஸ்து. உண்மையான கிறிஸ்தவனாய் இருக்க விரும்புகிறவன், அந்த அஸ்திபாரத்தின்மேல் தன்னுடைய வாழ்க்கையைக் கட்டவேண்டும். மத்தேயு 16இல் இயேசுவுக்கும் பேதுருவுக்கும் இடையே நடந்த பரிமாற்றத்தில் இதைப் பார்க்கிறோம். அங்கு இயேசு 'நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?' என்று கேட்டார். இயேசுவின் சவாலான கேள்விக்குப் பதிலளிக்கும் விதமாக, பேதுரு அறிவித்தார், 'நீரே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து [மேசியா]' (வசனம் 16). இதுதான் நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தனிப்பட்ட முறையில் நடக்க வேண்டிய காரியத்தின் மாதிரி. அந்த சந்திப்பில் நான்கு கூறுகள் உள்ளன.

**முதலாவது**, எதிர்படுதல். இயேசுவும் பேதுருவும், முகமுகமாய் நின்றார்கள். அவர்களுக்கு இடையில் எந்த மத்தியஸ்தனோ, ஆசாரியனோ, மூன்றாவது நபரோ நிற்கவில்லை.

**இரண்டாவதாக**, இயேசு கிறிஸ்துவின் நித்திய தன்மைக் குறித்து தேவனுடைய ஆவியானவரினால் கொடுக்கப்பட்ட வெளிப்பாடு இருந்தது – தச்சனுடைய மகனாக அல்ல, ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாக.

**மூன்றாவதாக**, பேதுரு அந்த வெளிப்பாட்டை பெற்று, ஒப்புக்கொண்டார். அவர் அதை மறுக்கவில்லை, அதை அணைத்துக் கொண்டார்.

**நான்காவதாக**, அவர் தன்னுடைய விசுவாசத்தை எல்லாருக்கு முன்பாகவும் அறிக்கையிட்டார்.

இந்த நான்கு கூறுகளும், வெற்றியுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படையிலும் இருக்க வேண்டும்: எதிர்ப்படுதல், வெளிப்பாடு, ஒப்புக்கொள்ளுதல் மற்றும் அறிக்கையிடுதல்.

## அஸ்திபாரத்தின் மேல் கட்டுதல்

அதற்குப் பின் மிக முக்கியமான நடைமுறைக்கேற்ற கேள்வியைப் பார்த்தோம். இந்த அஸ்திபாரத்தை அமைத்தபின், இதன் மேல் எப்படி கட்டுவது? இந்த அஸ்திபாரத்தின் மேல் கட்ட முதலாவது வேதத்தை, தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தை என்றும், இயேசுவை ஜீவனுள்ள வார்த்தை என்றும் ஏற்றுக்கொண்டு, இயேசு சொல்வதைக் கேட்டு அதன்படி செய்வது என்று, புத்தியுள்ள மற்றும் புத்தியற்ற மனிதனின் உவமையில் இருந்து கற்றுக்கொண்டோம். ஆகையால் அஸ்திபாரத்தின்மேல் கட்டுவது என்றால் இயேசு சொன்னதைக் கேட்டு அதின்படி செய்வதை உட்படுத்தவேண்டும்.

அதற்குப் பின் தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தையும், வல்லமையும் குறித்துப் பார்த்தோம். ஆங்கிலத்தில் அதிகாரம் (authority) என்கிற வார்த்தை எழுத்தாளர் (author) என்ற ஆங்கில வார்த்தையிலிருந்து வருகிறது. ஆகையால் எந்தப் புத்தகத்தின் அதிகாரமும் அதின் எழுத்தாளரைச் சார்ந்து இருக்கின்றது. வேதத்தின் அதிகாரமும் அதின் எழுத்தாளரையே சார்ந்திருக்கிறது. அந்த எழுத்தாளர், பரிசுத்த ஆவியானவர். தேவனுடைய ஆவியானவர்— தேவன்தாமே. ஆகையால் தேவனுடைய அதிகாரம் வேதத்தில் இருக்கின்றது.

அதற்குப் பின் வேதத்தை இரண்டு விதத்தில் பெற்றிருக்கிறோம் என்பதை சுட்டிக் காண்பித்தேன் – எழுதப்பட்ட வார்த்தை (வேதம்) மற்றும் சொந்தமான வார்த்தை (இயேசு, மாம்சமான தேவனுடைய வார்த்தை). ஒவ்வொரு வடிவத்திலும் நாம் வார்த்தைக்கு எவ்வாறு பதிலளிக்கிறோம் என்பது வேதத்துடனான நமது தனிப்பட்ட உறவைப் பிரதிபலிக்கிறது. நீங்கள் தேவனுடைய வார்த்தையை நேசிப்பதைவிட தேவனை அதிகமாக நேசிக்க முடியாது. நீங்கள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதை விட அவருக்கு அதிகமாகக் கீழ்ப்படிய முடியாது. தேவனுக்கு உங்கள் வாழ்க்கையில் எந்த ஸ்தானம் இருக்கிறது என்று நீங்கள் அறிய விரும்பினால், அவருடைய வார்த்தைக்கு என்ன ஸ்தானம் என்று கண்டுப்பிடியுங்கள். ஏனென்றால் இவை இரண்டும் ஒன்றாகத்தான் இருக்கின்றன. வேதம் எழுதப்பட்ட வார்த்தை, இயேசு சொந்தமான வார்த்தை. எழுதப்பட்ட வார்த்தையின் மூலம், சொந்தமான வார்த்தை நம்முடைய வாழ்க்கையில் பிரவேசிக்கின்றது.

## அஸ்திபார உபதேசம்

நாம் சொந்தமான அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பார்த்தோம். ஆனால் உபதேச அஸ்திபாரம் ஒன்று உண்டென்று புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிறது. இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்களின் கவனத்திற்கு தப்பியிருக்கும் இந்த வெளிப்பாடு, தெளிவாக எபிரேயர் 6:1–3 இல் கூறப்பட்டுள்ளது. அது இப்படியாக சொல்லுகிறது:

ஆகையால் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேசங்களை [அல்லது அடிப்படை சத்தியங்களை] நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு

நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி [முழுமை அல்லது முதிர்ச்சி] கடந்து போவோமாக. தேவனுக்குச் சித்தமானால் இப்படி செய்வோம்.

அங்கே இரண்டு சிந்தைகள் இருக்கின்றன. அவைகள் இரண்டையும் நாம் சேர்க்க வேண்டும். முதலாவது, அஸ்திபாரம் போடுவது அவசியமாய் இருக்கிறது. அஸ்திபாரத்தைப் போடாவிட்டால் மேலே கட்டிடத்தைக் கட்ட முடியாது. ஆனால் ஒருமுறை அஸ்திபாரத்தை போட்டு விட்டு, திரும்ப திரும்ப அதைப் போடாதபடிக்கு, கட்டிடத்தை முழுமை பெறச்செய்ய நாம் கடந்துபோகிறோம். இவை இரண்டும்தான் அந்த இணைக்கப்பட்ட சிந்தைகள். எபிரேயர் 6:1இல் "அஸ்திபாரம்" என்று கூறுகிறது. இது கிறிஸ்தவ விசுவாசத்தின் உபதேச அடித்தளம். அதில் ஆறு உபதேசங்கள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன:

1. செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல்.
2. தேவன் பேரில் வைக்கும் விசுவசம்.
3. ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்.
4. கைகளை வைக்குதல்.
5. மரித்தோரின் உயிர்த்தெழுதல்.
6. நித்திய நியாயத்தீர்ப்பு.

அந்தப் பட்டியலின் முன்னேற்றத்தைப் பின்பற்றினால், கிறிஸ்தவ விசுவாசத்தின் துவக்கத்திலிருந்து, நித்தியத்தில் அதற்கு உண்டாகும் நிறைவுவரை இது நம்மை

அழைத்துச் செல்கிறது. கிறிஸ்தவ விசுவாசம் இம்மையில் முடிவு பெறுகிற ஒன்றல்ல—இந்த வாழ்க்கையிலோ, உலகத்திலோ முடிவு பெறுகிறதில்லை, என்பதை அறிந்து கொள்வது மிக முக்கியமானது. இந்த உலகத்திக்கு அப்பாற்—காலத்தைக் கடந்து, நித்தியத்திற்குள் அழைத்துச் செல்கின்றது.

இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்களுக்கு, நித்தியத்தைக் குறித்து தரிசனமே கிடையாது. அவர்கள் சிந்திப்பதும், செயல்படுவதும், முக்கியமான எல்லாமே இம்மையில் நடந்து முடியுமாப்போல் இருக்கின்றது. இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்தால், எல்லா மனுஷரிலும் நாம் மிகவும் பரிதபிக்கக்கூடியவர்களாயும் இருக்கின்றோம் என்று பவுல் சொல்லுகிறார். காலத்தைக் கடந்து, நித்தியத்திற்குள் நம்மை அழைத்துச் செல்லும் தரிசனம் நமக்கு இறாவிட்டால், நாம் பல ஏமாற்றங்களைச் சந்திப்போம். காலம் கிறிஸ்தவ வாழ்க்கையின் நிறைவு அல்ல. நிறைவு நித்தியத்தில் வரும்.

ஆகையால் இந்த ஆறு உபதேசங்களும் ஆரம்ப நிலையிலிருந்து, அதாவது மனந்திரும்புதலிலிருந்து, உயிர்தெழுதலும் நித்திய நியாயத்தீர்ப்பு வரையிலும், அழைத்துச் செல்கின்றன.

## தேவன் அனுமதித்தால்

நான் முதல் மூல உபதேசமாகிய செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதலை தொடங்குவதற்கு முன், எபிரேயர் 6:3 இல் எபிரேயரின் எழுத்தாளர் கூறிய ஒரு குறிப்பிடத்தக்க வாக்கியத்தை, முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்:

தேவனுக்குச் சித்தமானால் இப்படியே செய்வோம்.

தேவன் அனுமதித்தால் நாம் முழுமைக்கும், பூரணத்திற்கும் கடந்து செல்வோம். நீங்கள் கேட்கலாம், "தேவன் ஏன் அனுமதிக்கமாட்டார்? நிச்சியமாக நாம் எல்லாரும் முன்னேறி செல்வதைத் தானே அவர் விரும்புகிறார்."

இந்த அறிக்கை எழுப்பக்கூடிய எந்தவொரு கேள்விக்கும் நாம் ஒரு எளிய உதாரணம் மூலம் பதிலளிக்கலாம். இன்று நாகரீக உலகில் எந்த ஒரு பெரிய நகரத்திலும், ஒரு கட்டிடம் கட்ட, உங்களிடம் ஒரு திட்டம் இருக்க வேண்டும். நீங்கள் அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெற வேண்டும், மேலும் அவர்கள் உங்கள் திட்டத்தை அங்கீகரிக்க வேண்டும். பின்னர் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதால் கட்டம் கட்டமாக ஆய்வு செய்ய வருகிறார்கள். ஆனால் அவர்கள் உண்மையில் ஆய்வு செய்யும் கட்டுமானத்தின் முதல் அம்சம் அடித்தளம். அஸ்திவாரம் விவரக்குறிப்புகளுடன் இல்லாவிட்டால், கட்டிடம் பாதுகாப்பாக இருக்காது. அடித்தளம் உறுதியாக இல்லை என்றால், கட்டிடத்தைத் தொடர அனுமதி வழங்க மாட்டார்கள்.

தேவன் உங்களோடும், என்னோடும் இதே விதத்தில்தான் இடைப்படுகிறார். அவர் சொல்லுகிறார், "நான் உன் அஸ்திபாரத்தை சோதிக்க வேண்டும். அது என்னுடைய எதிர்பார்ப்பு படி இல்லாவிட்டால் தொடர்வதற்கு அனுமதி கொடுக்க மாட்டேன்."

சரியான அஸ்திபாரம் போடாதிருந்தால், முதிர்ச்சி பெறாமல், முழுமை பெறாமல், நிறைவு பெறாமல், கிறிஸ்தவ விசுவாசத்தின் இதே ஆரம்ப நிலையில் நீங்கள் என்றென்றும் தொடர

முடியும். ஆகையால் கிறிஸ்தவ விசுவாசத்தின் அஸ்திபாரமான இந்த ஆறு உபதேசங்களையும் நாம் முற்றிலும் கற்றுக்கொள்வது முற்றிலும் அத்தியாவசியமானது.

## செத்த கிரியைகள்

செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதலில் ஆரம்பம் செய்கிறோம். செத்தகிரியைகள் என்றால் என்ன? புதிய மொழிப்பெயர்ப்புகள் அதை மரணத்துக்கு நேரே நடத்துகிற செயல்கள் அல்லது கிரியைகள் என்று கூறுகின்றன. அது சரி என்று நான் எண்ணவில்லை.

தேவன் பேரில் வைக்கும் விசுவாசத்தில் செய்யப்படாத எந்தக் காரியமும் செத்தகிரியைகள். விசுவாசத்தில் செய்யப்படாத எதுவும் செத்தகிரியை. நம்முடைய செயல்களில் ஜீவனைக் கொண்டு வருவது விசுவாசமே.

நீங்கள் ஒழுங்காக ஆலயத்திற்கு சென்றிருக்கலாம். நீங்கள் ஏழைகளுக்குப் பணம் கொடுத்திருக்கலாம். நீங்கள் ஜெபித்திருக்கலாம். ஆனால் அது விசுவாசத்தில் செய்யப்படாவிட்டால், அதெல்லாம் செத்த கிரியைகளாய் இருக்கின்றன. விசுவாசத்தில் செய்யப்படாத எதையும் விட்டு நாம் திரும்பிவிடவேண்டும். நாம்நம்புவதற்கும்,செய்யும் காரியங்களுக்கும் ஜீவன் கொடுப்பது விசுவாசம் மட்டுமே.

அப்படியென்றால் நீங்கள் பாவ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தமல்ல. ஆனால் இன்னும் விசுவாசம் உங்கள் இருதயத்தில் வந்து, தேவனுடைய ஜீவனைக் கொண்டு வரவில்லை என்பதினால்

நீங்கள் தேவனுக்கு ஜீவனுள்ளவர்களாய் இருக்கவில்லை.

## மனந்திரும்புதல்

மனந்திரும்புதல் ஒரு உணர்ச்சியல்ல என்று புரிந்துகொள்வது மிக அவசியம். பல பிரசங்கியார்கள் மக்களை உண்ர்ச்சிவசமாக தூண்டி அவர்களை கிறிஸ்துவில் விசுவாசம் வைக்க அழைப்பார்கள். பல முறைகள் இது வீழ்ச்சியில் முடிகிறது ஏனென்றால் உணர்ச்சி தீரும்போது அவர்களிடத்தில் ஒன்றுமில்லை.

வேதத்தில் வரையறை செய்யப்பட்டிருக்கும் மனந்திரும்புதல் உணர்ச்சியிலிருந்து தோன்றுவதல்ல என்று மனதில் கொள்ளுங்கள். அது ஒரு தீர்மானம். அது உணர்ச்சிகளிலிருந்து தோன்றுவதில்லை. அது சித்தத்திலிருந்து தோன்றுகிறது.

நாம் ஜனங்களுடைய சித்தத்தை எட்டி, அதைத் திருப்பக் கூடுமானால், நிரந்தரமான மாற்றத்தை நாம் காண முடியும். சபையில் உண்டாகும் அநேக மனமாற்றங்கள் நீடிக்காததற்குக் காரணம் அவைகள் அந்த நபரின் சித்தத்தை உண்மையில் மாற்றினது இல்லை. அவர்களுக்கு உணர்ச்சிப்பூர்வமான அனுபவம் உண்டாயிருக்கிறது. அவர்கள் உற்சாகமடைந்தார்கள். ஒரு சில வாரங்களுக்கோ, மாதங்களுக்கோ ஏன் சில வருஷங்களுக்கு கூட அவர்கள் அற்புதமாக உணர்ந்திருக்கலாம். ஆனால் இறுதியில் கிறிஸ்தவ வாழ்க்கையில் தொடர வேண்டியவை அவர்களிடம் இல்லை. ஏனெனில் அவர்களின் சித்தம் தொடப்படவில்லை.

இந்த மனந்திரும்புதலைப் பற்றி நாம்

தொடர்ந்து பார்க்கும்போது, அவ்வார்த்தையின் பொருளைப் புரிந்துகொள்ள இது உதவும்.

வேதம் இரண்டு பிரதானமான மொழிகளைப் பயன்படுத்துகிறது: புதிய ஏற்பாட்டிற்கு கிரேக்கம், பழைய ஏற்பாட்டிற்கு எபிரேயம். இவ்விரண்டு பாஷைகளிலும், மனந்திரும்புதலுக்கு, தனிப்பட்ட வார்த்தை உள்ளது. ஆனால் இவை இரண்டையும் இணைத்தால்தான் மனந்திரும்புதலின் முழு அர்த்த்மும் கிடைக்கின்றது.

கிரேக்கத்தில் அந்த வார்த்தையை மொழிபெயர்த்தால் “மனதை மாற்றிக்கொள்வது” — நீங்கள் சிந்திக்கும் விதத்தை மாற்றிக் கொள்வது என்று அர்த்தமாகும். ஆகையால் மனந்திரும்புதல் என்பது முதலாவது நீங்கள் வாழ்ந்து வரும் விதத்ததைக் குறித்து உங்கள் மனதை மாற்றிக் கொள்வதாகும். “இதுவரையிலும் நான் என் சுய இஷ்டத்தின்படி, என்னைத் திருப்திப்படுத்த வாழ்ந்து வருகிறேன். ஆனால் இனி மேல் என் இரட்சகராகிய இயேசுவைத் திருப்திப்படுத்த நான் வாழப்போகிறேன்.” என்று கூறுவதை இது உட்படுத்தலாம். நான் முன்பு சொன்னது போல இது ஒரு தீர்மானம், ஒரு உணர்ச்சியல்ல. எந்த வெளியரங்கமான உணர்ச்சிகள் இல்லாமல் நீங்கள் மனந்திரும்ப முடியும். ஆனால் சித்தத்தில் மாறுதல் இல்லாமல் மனந்திரும்ப முடியாது.

மனந்திரும்புதலுக்கான எபிரேய வார்த்தை ஒரு விளைவை உள்ளடக்கியது. இது யூத மக்களுக்குரிய காரியம் ஏனென்றால் அவர்கள் மிக எளிமையானவர்கள். அவர்கள் அறிய விரும்புகிறது. இது எப்படி செயல்படும்? மனந்திரும்புதலுக்கான எபிரேய வார்த்தையின் அர்த்தம், “பின்னிட்டுத் திரும்புவது.” நீங்கள் ஒரு

வழியை நோக்கி நிற்கிறீர்கள்—உங்கள் முதுகை தேவனுக்கு காட்டியவாறு, தவறான வழியில் —எனவே நீங்கள் 180 டிகிரி திரும்பி, தேவனை நோக்கி, 'தேவனே, இங்கே நான் இருக்கிறேன். என்ன செய்ய வேண்டும் என்று சொல்லும், நான் அதைச் செய்வேன்.' நாம் கிரேக்க மற்றும் எபிரேய வரையறைகளை ஒன்றாக இணைத்தால், மனந்திரும்புதலின் முழுமையான படம் நமக்குக் கிடைக்கும்: இது ஒரு முடிவைத் தொடரும் ஒரு செயல்.

## விசுவாசம் மனந்திரும்புதலைத் தொடர்கிறது

வேதத்தின் முழு செய்தியும் இந்த வரிசையில்தான் வருகிறது: மனந்திரும்பி, விசுவாசி. அநேக ஜனங்கள் விசுவசத்திற்காக போராடிக்கொண்டிருக்கிறார்கள். உண்மை என்னவென்றால் அவர்கள் விசுவாசத்திற்காக போராடவில்லை. மனந்திரும்புதலின் நிபந்தனையை இதுவரைக்கும் அவர்கள் நிறைவேற்றினது இல்லை. மனந்திரும்புதல் ஆறு அஸ்திபார உபதேசங்களில் முதல் இடத்தில் இருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும். அந்த அஸ்திபாரக்கல் அதின் இடத்தில் இல்லை என்றால்,உங்கள் கட்டிடம் எப்பொழுதும் அசைந்துக் கொண்டேதான் இருக்கும்.

பல வருஷங்களாக தங்கள் தனிப்பட்ட பிரச்சனைகளைப் பகிர்ந்துகொள்ள வந்த நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்களுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறேன். பல அனுபவங்களுக்குப் பின், நான் இந்த முடிவுக்கு வந்தேன் – குறைந்தது ஐம்பது சதவீத கிறிஸ்தவர்களின் பிரச்சனைக்குக் காரணம்

ஒன்று தான் — அவர்கள் உண்மையாக மனந்திரும்பினதில்லை.

அவர்கள் உண்மையில் மனதை மாற்றினதில்லை. உண்மையில் ஒரு தீர்மானம் எடுத்து, இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு தங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்ததே இல்லை. "நான் இதைச் செய்தால், எனக்கு என்ன கிடைக்கும்? நான் அதைச் செய்தால் எனக்கு என்ன கிடைக்கும்?" என்கிற கோணத்திலிருந்தே அவர்கள் தீர்மானங்களை சிந்திக்கிறார்கள். அவர்கள் மனந்திரும்பிவிட்டால் அவ்விதமாய் சிந்திக்கமாட்டார்கள். "நான் இதைச் செய்தால் இயேசுவை மகிமைப் படுத்துமா?" என்று சிந்திப்பார்கள்.

ஆகையால் அநேகர் — முக்கியமாக வாலிபர்கள், அனால் வாலிபர்கள் மட்டுமல்ல— இரண்டுமனமுள்ளவர்களாய்காணப்படுகிறார்கள். வேதம் சொல்லுகிறது, இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவன் (யாக்கோபு 1:8ஐ பார்க்கவும்). அவனுக்கு உறுதியான அஸ்திபாரமும் இல்லை, அவன் உறுதியான கட்டிடத்தை உருவாக்கவும் முடியாது.

ஆகையால் நீங்கள் இருக்கும் இடத்தில், அமைதியாக சிந்தித்து "நான் உண்மையில் மனந்திரும்பினது உண்டா? அல்லது இன்னும் இரு மனம் எனக்குள் இருக்கிறதா? திங்கட்கிழமை என் நோக்கம் இயேசுவை திருப்திபடுத்துவதாக இருக்கிறதா, செவ்வாய்கிழமை என் நோக்கம் என்னையே திருப்திப்படித்திக் கொள்வதாக இருக்கிறதா?" அப்படித்தான் நீங்கள் சிந்திக்கிறீர்கள் மற்றும் வாழ்கிறீர்கள் என்றால், உண்மையில், இரு உலகங்களிலும் உங்களுக்கு

மோசமானதே கிடைத்துள்ளது. இது உங்கள் மனநிலையாக இருந்தால், நீங்கள் உலகில் வாழ்வது, உங்களுக்காக வாழ்வது நல்லது – ஏனென்றால் நீங்கள் இரட்டை எண்ணம் கொண்டவர், பிளவுபட்ட ஆளுமை.

ஆனால், உண்மையில், நீங்கள் நினைக்கும் மற்றும் வாழும் விதம் அதுவாக இருந்தால், இயேசுவை மகிமைப்படுத்துவதற்குப் பதிலாக உண்மையிலேயே மனந்திரும்பி வாழ இப்போதே நடவடிக்கை எடுங்கள்.

## மனந்திரும்புதலின் தன்மை

உண்மையான மனந்திரும்புதலின், தெளிவான மிகச் சிறந்த உதாரனமாக இயேசு சொன்ன ஒரு உவமை உண்டு. கெட்ட குமரனின் உவமை. (ஒருவர் சொன்னார் இந்த உவமையை "கரிசனையுள்ள தகப்பன்" என்று அழைக்கவேண்டுமாம்.) லூக்கா 15இல் இந்த கதை உள்ளது. மிகுந்த ஆஸ்தியுள்ள ஒரு குடும்பத்தின் இரண்டாம் மகன் தன் தகப்பனிடத்திலிருந்து தன் சொத்துக்களை எல்லம் பெற்று, தூர தேசத்திற்குப் போய் அங்கே எல்லவற்றையும் செலவு செய்தான். பாவமான பல காரியங்களைச் செய்தான். தன் முழு சொத்தையும் செலவிட்ட பின்பு, ஒரு கொடிய பஞ்சம் வந்தது, அவனுக்குக் கிடைத்த ஒரே வேலை, பன்றிகளுக்கு ஆகாரம் கொடுப்பது தான். (அவன் யூதன் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும், அதனால் பன்றிகளுக்கு உணவளிப்பது தாழ்விலும் தாழ்வான நிலையாக இருந்தது— இன்றைய பன்றி வளர்ப்பவர்களை சிறிதும் கொச்சைப்படுத்தாமல் சொல்கிறேன். யூத மக்களுக்கு, ஒரு பன்றி எலிக்கும் ஒரு படி தாழ்ந்ததாகும்)

**ஆகவே வழி தவறிய குமாரன், கந்தைகளில், பசியோடு, பன்றிக்குக் கொடுக்கும் தவிட்டினால் தன் வயிற்றை நிரப்ப வாஞ்சையாய், பன்றிகளுக்கு ஆகாரம் கொடுக்கிறான். அப்பொழுது நடந்தது இது தான்:**

"அவனுக்கு புத்தி தெளிந்த போது....."

லூக்கா 15:17

**அந்த நிலைக்கு தான் நாம் ஒவ்வொருவரும் வர வேண்டும். "உண்மையை கண்டறியும்" ஒரு நொடி என்று நான் அதை அழைப்பதுண்டு. நீங்கள் இருக்கிற வண்ணமாகவே உங்களை காண வேண்டும். தேவன் உங்களை கான்கிற விதமாக, உங்களை நீங்கள் காண வேண்டும்.**

"அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி; எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்."

வசனம் 17 – 20

## உண்மையான மனந்திரும்புதல்

**இப்போது இரண்டு கூறுகளைக் காண்கிறீர்களா? – ஏனென்றால் இந்த வசனம்**

இப்படியாக தொடர்கிறது: அவன் ஒரு தீர்மானம் செய்தான், பின் திரும்பினான். அதுதான் மனந்திரும்புதல்: ஒரு திர்மானம் செய்து, அந்த தீர்மானத்தை நிறைவேற்றுவது.

மனந்திரும்புதல் என்பது, மனது புண்படுத்தப்பட்ட தகப்பனிடத்தில் திரும்பி சென்று, உங்களை நேசிக்கிற தேவனிடத்தில், “என் வாழ்க்கையை வீணாக்கினேன், என் வாழ்க்கையை நான் தொடர முடியாது, நீர் எனக்கு வேண்டும். என்னைத் திரும்ப ஏற்றுக்கொள்வீரா?” என்று சொல்வது தான்.

அவன் எவ்வளவு முழுமையாக மனந்திரும்பினான் மற்றும் அவனது தந்தை அவனைப் பெற எவ்வளவு ஆர்வமாக இருந்தார் என்பதைப் பார்ப்பது அற்புதமானது. அவன் தகப்பனிடத்தில், “என்னை வேலைகாரரில் ஒருவராக வைத்துக்கொள்ளும்” என்று சொல்ல முடிவு செய்திருந்தான். ஆனால் அவன் திரும்பினபோது, அவன் தகப்பன் அவனுக்காக காத்திருந்தார். தேவன் அப்படித்தான் இருக்கிறார். நாம் திரும்ப ஆரம்பிக்கும் போது, அவர் நமக்காக எதிர்ப்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறார். இது மிகவும் அழகாக இருக்கிறது.

அவன் தூரத்தில் வரும்போதே தகப்பன் அவன் வருகிறதைக் கண்டு, அவனைச் சந்திக்கும்படி ஓடினார். அவனை முத்தம் செய்தார். “என்னை வேலைக்காரரில் ஒருவராக வைத்துக் கொள்ளும்” என்று அவன் சொல்ல நினைத்த அந்தக் கடைசி வார்த்தைகளைச் சொல்ல விடவில்லை. அவர் சொன்னார்:

> “நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து,
> இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும்

> கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள்"
> வசனம் 22–23

அதுதான் உண்மையான மனந்திரும்புதலின் விளைவு. தேவனால் அப்படிப்பட்ட ஒரு வரவேற்பை பெற, மனந்திரும்புவது ஏற்றதாய் இருக்கிறது.

நீங்கள் அந்தக் காட்சியை ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். அவன் புத்தி தெளிந்து, "என் வாழ்க்கையை வீணாக்கினேன். என் தகப்பன் கொடுத்த எல்லாவற்றையும் வீண் விரையம் செய்தேன். ஆனாலும் நான் ஒரு தீர்மானம் செய்ய போகிறேன். நான் திரும்பி, என் தகப்பனிடத்தில் போய், என்னை மன்னியும் என்று சொல்லப்போகிறேன்." அவன் திரும்பிப் போனான். அதை சிந்தித்து பாருங்கள். அதுதான் உண்மையான மனந்திரும்புதல். கிரியையில் காணப்படும் மனந்திரும்புதல்.

## மாயையான மனந்திரும்புதல்

"மனஸ்தாபம்" என்று அழைக்கப்படும் பொய்யான மனந்திரும்புதல் ஒன்று உண்டென்று நாம் புரிந்துகொள்ள வேண்டும். மத்தேயுவின் நற்செய்தியில் விவரிக்கப்பட்டுள்ளபடி, யூதாஸ் அந்த வகையான தவறான மனந்திரும்புதலை அனுபவித்தார்:

> அப்பொழுது, அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியத்திடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து: குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன்

என்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன்பாடு என்றார்கள். அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசை தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான்.

மத்தேயு 27:3–5

யூதாஸ் மனஸ்தாபப்பட்டான். ஆனால் அவன் மாறவில்லை. உண்மையைச் சொன்னால், அவன் மாறக்கூடிய இடத்தைக் கடந்து விட்டான். என்னைப் பொறுத்தவரை இது ஒரு கனமான சிந்தனை. மக்கள், மாறக்கூடிய இடத்தை வாழ்க்கையிலே கடந்து விடக்கூடும்.

எந்த மனிதனின் வாழ்க்கையிலும், தேவன் அவனை மனந்திரும்ப தூண்டுகிற அந்த நொடி மிகவும் மகத்தானது. "எனக்கு ஆர்வமில்லை. ஒருவேளை பின்பு பார்த்துக் கொள்ளலாம்" என்று நீங்கள் அசட்டை பண்ணினால், தேவன் மறுபடியும் உங்களோடு இடைபடுவார் என்று எந்த நிச்சயமும் இல்லை. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் மிக முக்கியமான நொடி, "மனந்திரும்பு. நான் உன்னை திரும்ப ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறேன். உன்னை நேசிக்கிறேன், நீ எனக்கு வேண்டும்" என்று தேவன் சொல்லுகிற நொடி தான்.

## தேவனைக் கோபப்படுத்துவது எது?

ஜனங்களுடைய வாழ்க்கையிலும், வேதத்திலும் நான் கண்டதை சிந்தித்துப் பார்த்திருக்கிறேன். தேவனை மிகவும் கோபப்படுத்துகிற ஒரு காரியம், அவருடைய கிருபையை அசட்டைப்பண்ணுவது தான் என்ற முடிவுக்கு நான் வந்துள்ளேன். அவர் இலவசமாய் நமக்குக் கிருபையை அளிக்கிறார். ஆனால்

**அதை அசட்டை பண்ணினால் கோபத்தோடு திரும்பிவிடுகிறார்.**

**தேவனுடைய கிருபையை அசட்டை பண்ணின ஒரு நபர் ஏசா. எபிரேயர் 12 அவன் செயலை விவரிக்கின்றது. அந்தப் பகுதியைப் பார்க்கலாம். ஏனென்றால் உங்களையும் என்னையும் போன்ற மக்களுக்குள் அந்த ஏசா அதிகமாக இருக்கிறான். நமக்குள் இருக்கும் ஏசா நம்முடைய தீர்மானங்களைச் செய்யாதபடி நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.**

> யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே. ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும், ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.
>
> எபிரேயர் 12:14–16

**ஏசா வேசித்தனம் செய்தான் என்று எங்கும் எழுதப்படவில்லை. ஆனால் தேவனுடைய பார்வையில் அவனுடைய மனப்போக்கு வேசித்தனத்திற்கு ஒப்பான கேடானதாயிருந்தது. அவனுடைய மனப்போக்கு என்ன? ஒரு கோப்பை கூழுக்காக, அவன் தன் சேஷ்டபுத்திரபாகத்தை அசட்டைப்பண்ணினான். மூத்த குமாரன் என்றதாலே, சேஷ்டபுத்திரபாகம் அவனுடையதாய் இருந்தது—முழுச் சுதந்திரத்தையும் அவனே**

பெற்றிருக்கக்கூடும். ஆனால் அவன் சரீரப் பிரகாரமான பசியாய் இருந்ததினால், யாக்கோபு தயாரித்த சுவையான கூழின் வாசனையை விரும்பி முகர்ந்ததாலும், அதைச் சாப்பிட்டான்.

இது எனக்கு மிகத் தெளிவாக இருக்கிறது. ஏனென்றால் நான் சில காலம் அரபியர் மத்தியில் வாழ்ந்திருக்கிறேன். அவர்கள் யாக்கோபு பருப்பில் செய்த அதே கூழை இன்னமும் செய்கிறார்கள். வீடு முழுவதும் பரவும் மிக அருமையான வாசனையுள்ளது. ஏசா வேட்டையாடி விட்டு—களைப்போடும், பசியோடும்—திரும்பி வந்து இந்த அருமையான கூழை முகர்வதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. பேரம் பேசுகிறவனாய் இருந்த யாக்கோபு சொல்லுகிறான், "சகோதரனே கேள், உன் சேஷ்டபுத்திரபாகத்தை எனக்கு விற்றுப் போடு, நான் உனக்கு இந்த கூழைக் கொடுக்கிறேன்."

ஏசா யோசித்தான், "என் சேஷ்டபுத்திரபாகம் இப்பொழுது எனக்கு என்ன பயன்? நான் பசியாயிருக்கிறேன். எனக்குக்கொடுக்கப்படுகிறதை நான் எடுத்துக்கொள்கிறேன்."

ஏசா சேஷ்டபுத்திரபாகத்தை அசட்டை பண்ணினதனால், தேவனை மிகவும் கோபப்படுத்தினான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பின்பு மல்கியா தீர்க்கதரிசியின் மூலமாய் தேவன் சொல்கிறார், "யாக்கோபை நேசித்தேன், ஏசாவையோ நான் வெறுத்தேன்" (மல்கியா 1:2—3). அது மிகவும் சிந்திக்க வேண்டிய ஒரு காரியம்: வேண்டுமென்றே தேவ கிருபையையும், கிறிஸ்து இயேசுவின் மூலமாய் நமக்கு அளிக்கப்படும் சுதந்தரத்தையும் இவ்வுலகத்தின் இழிவான,

கடந்துபோகிற இன்பத்துக்காக அசட்டைப் பண்ணி, திரும்பினால், நீங்கள் தேவனை மிகவும் கோபப்படுத்துகிறீர்கள்.

## திரும்ப வர முடியாத முனையைத் தவிர்த்தல்

எபிரேயரில், ஏசாவைப் பற்றிய செய்தி தொடர்கிறது:

> ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்.
>
> எபிரேயர் 12:17

கிரேக்கத்தில் இது மிகத்தெளிவாக இருக்கிறது. அவன் மனந்திரும்புதலின் ஸ்தானத்தைத் தேடவில்லை, ஆசீர்வாதத்தைத் தேடினான். ஆனால், அவன் இடம் பெறாமல், மனந்திரும்ப வழி இல்லாமல் தள்ளப்பட்டான். இந்த வாழ்க்கையில் ஒரு மனுஷன் மனந்திரும்புதலின் ஸ்தானத்தை கடந்து விட்டு, திரும்பக் கூடாமல் போக முடியும் என்று நான் நம்புகிறேன்.

அநேக ஆலயங்களிலும், சபை பிரிவுகளிலும், இன்றைக்கு மனந்திரும்புதலைக் குறித்து மிக குறைவாகத்தான் பேசப்படுகிறது. ஆனால் உண்மையான மனந்திரும்புதல் இல்லாமல் உண்மையான விசுவாசம் இல்லை. மேடு பள்ளமுள்ள, தடுமாற்றமான அனுபவம்தான் உங்களுக்கு இருக்கும். ஏனென்றால் முதல் அஸ்திபார கல்லாகிய மனந்திரும்புதலை நீங்கள் போடவில்லை. உங்கள் சித்தத்தின்

தீர்மானத்தினால், சுயத்தைத் திருப்திப்படுத்துவதையும், உங்கள் சொந்தமான காரியங்களைச் செய்வதும் விட்டுத் திரும்பி, தேவனை முகமுகமாய் பார்த்து, "தேவனே இங்கே இருக்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும் சொல்லும், செய்கிறேன்," என்று சொல்வதுதான் மெய்யான மனந்திரும்புதல்.

இதை வாசிக்கிற உங்களில் ஒரு சிலர் உண்மையாக மனந்திரும்பினதே இல்லை. இது தான் உங்கள் பல்வேறு பிரச்சனைகளுக்குக் காரணமாய் இருக்கிறது என்று கூற விரும்புகிறேன். உங்கள் மேடு பள்ளமான அனுபவங்கள்—ஒரு நாள் நன்றாக இருப்பீர்கள். ஆலயத்தில் அருமையான கூட்டம் நடக்கும், எல்லாம் அற்புதமாக இருக்கிறது என்று நினைப்பீர்கள். அடுத்த நாளே ஏதோ ஒன்று நடக்க, நீங்கள் சோர்ந்துப்போய் விடுகிறீர்கள். உண்மையாக நீங்கள் இன்னும் முதல் அஸ்திபாரகல்லை வைக்கவில்லை. உங்களிடம் இருக்கிறதெல்லாம் ஆடிக்கொண்டிருக்கிற கட்டிடம், திடீர் என்று ஒரு நாள் அதுவும் இடிந்து விழுந்துவிடும்.

## மனந்திரும்புதல், பின்பு விசுவாசம்

மனந்திரும்புதல் விசுவாசத்துக்கு முன்செல்ல வேண்டும் என்று இப்பொழுது நான் வலியுறுத்த விரும்புகிறேன். மனந்திரும்புதல் இல்லாமல் உண்மையான விசுவாசம் இல்லை. புதிய ஏற்பாடு முழுவதிலும் இது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம் செய்ய அனுப்பப்பட்ட யோவான் ஸ்நானகனின் ஊழியத்தைக் குறித்து நாம்

**மத்தேயு 3ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். சுருக்கமாக அவன் செய்தி என்ன? "மனந்திரும்பு." மேசியா வரும்முன் மனந்திரும்புதல் அவசியம் என்று யோவான் போதித்தார். மனந்திரும்புதல் மேசியாவின் வருகைக்கு வழியை ஆயத்தம் செய்தது. தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேல் இந்த மனந்திரும்புதலின் அனுபவத்தைக் கடந்து வராமல், மேசியாவைச் சந்திப்பதற்கு ஆயத்தமாக இருந்திருக்க முடியாது.**

> அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து: ''மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம்பண்ணினான்.'' கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே. மத்தேயு 3:1–3

**யோவான் ஸ்நானகன், கர்த்தருடைய வழியை எப்படி ஆயத்தம் பண்ணினான்? தேவனுடைய ஜனங்களை மனந்திரும்புதலுக்கு அழைப்பதன் மூலம். தேவன் நம்முடைய இருதயங்களுக்குள்ளும், வாழ்க்கைக்குள்ளும் வருவதற்கு மனந்திரும்புதல் ஒன்றே வழியை ஆயத்தம்பண்ணும்.**

## இயேசு செய்தியைத் தொடர்கிறார்

**யோவன் தனது ஓட்டத்தை முடித்தவுடன், இயேசு தாமே, யோவானின் தீர்க்கதரிசன வார்த்தையை நிறைவேற்றும் விதத்தில், சுவிசேஷத்தின் ஊழியத்தைத் தொடர வந்தார். மாற்கு சுவிசேஷத்தில் சொல்லுகிறது:**

யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: ‘காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்’ என்றார்.

மாற்கு 1:14–15

மனந்திரும்பி விசுவாசி. முதலில் மனந்திரும்பாவிட்டால், உண்மையாய் விசுவாசிக்க முடியாது. இயேசு கிறிஸ்துவின் வாயிலிருந்து வந்த முதல் கட்டளையின் வார்த்தை விசுவாசி என்பது அல்ல, மனந்திரும்பு.

தென்கிழக்கு ஆசியாவில் ஒரு கூட்டத்தை நான் நினைவுகூறுகிறேன். அதில் ஒரு பிரசங்கியார் தெய்வீக சுகத்தைக் குறித்து பிரசங்கித்தார். அவர் தேவனுடைய சித்தத்தைக் குறித்தும், திட்டத்தைக் குறித்தும் வெகு திறமையாக பேசி, சுகத்தை பற்றி சில வசனங்களையும் சுட்டிக்காண்பித்தார். ஆனால் அவர் மக்களை முன்னே வர அழைப்பதற்கு முன்பு மனந்திரும்புதலைப் பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை.

ஜனங்களில் பலர், விக்கிரக ஆராதனையின் பின்னணியில் இருந்து வந்தவர்கள். தேவன் அவர்களுக்குக் கொடுப்பதை பெற்றுக்கொள்வது எப்படி என்பதைக் குறித்து அவர்களுக்குச் சற்றும் தெரியாது. எனக்குத் தெரியும், ஏனென்றால் நானும் ரூத்தும் அவர்களுக்கு ஆலோசனை கொடுப்பதில் ஈடுப்பட்டிருந்தோம். அது எனக்கு ஒரு பெரியப்பாடமாக இருந்தது. அவருடைய எல்லா நல் எண்ணங்களோடும், இனிய வார்த்தைகளினாலும், அவர் அந்த ஜனங்களை

மிகவும் குழப்பத்திற்குள் ஆழ்த்தினார். ஏனென்றால் அவர் ஜனங்களுக்குக் கொடுத்த எண்ணம், மனந்திரும்புதல் இல்லாமல் நீங்கள் தேவனிடத்தில் வர முடியும் என்பது தான். அவர் தம்முடைய செய்தியில் ஒருமுறை கூட, மனந்திரும்பு என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை.

நான் ஒரு பிரசங்கியாரை விமர்சிப்பதற்காக இதைச் சொல்லவில்லை. இதை நான் சொல்வதற்குக் காரணம், இதன் மூலமாய் நான் ஒரு பாடத்தைக் கற்று கொண்டேன். சுவிசேஷ சபைகளிலும், சுவிசேஷ கூட்டங்களிலும் குழப்பப்பட்டுக்கொண்டிருக்கிற அநேக ஜனங்கள் உண்டென்று அஞ்சுகிறேன். ஏனென்றால், தேவன் அவர்களுக்கு என்ன கொடுப்பார் என்பதுதான் அவர்களுக்கு போதிக்கப்பட்டு வருகிறது. தேவன் அவர்களிடத்தில் எதிர்பார்ப்பது என்ன என்பது போதிக்கப்படுவதில்லை. அவர் எதிர் பார்க்கிற முதல் காரியம் மனந்திரும்புதல்—உங்கள் மனதை மாற்றுங்கள், திரும்புங்கள், 180டிகிரி திரும்புங்கள். தேவனைப்பார்த்து, “தேவனே, நான் என்ன செய்வது என்று எனக்குச் சொல்லும், நான் செய்கிறேன்” என்று சொல்லுங்கள். அது தான் மனந்திரும்புதல்.

இயேசுவின் ஊழியத்தின் கடைசி வரையிலும் நாம் பார்த்தாலும், அவருடைய செய்தி மாறவே இல்லை. உயிர்த்தெழுந்த பின்பு, இயேசு தமது சீஷர்களுக்குக் கட்டளை கொடுக்கிறார். (இயேசு உலகத்தை விட்டு போவதற்கு சற்று முன்பாக இது நடந்ததென்பதை மனதில் கொள்ளுங்கள்.)

எழுதியிருக்கிறபடி, ''கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில்

> மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது.
>
> லூக்கா 24:46–47

செய்தியின் வரிசையைக் கவனித்துப் பாருங்கள். மனந்திரும்புதல் அதற்குப் பின் நிவிர்த்தி அல்லது பாவமன்னிப்பு. மனந்திரும்புதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்பதுதான் எருசலேம் துவங்கி பூமியின் சகல தேசங்களுக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டிய செய்தி. மனம்திரும்புதல், பின்பு அவர் நாமத்தினாலே பாவ மன்னிப்பு.

## பேதுரு செய்தியை வலியுறுத்துகிறார்

அதற்குப் பின், சபை எல்லாருடைய கண்களுக்கு முன் வெளிவந்த பெந்தேகோஸ்தே நாளன்று, பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டு, திரளான யூதர்கள் கூடி, என்ன நடக்கிறதென்று அறிய விரும்பினது. பேதுரு எழுந்து நின்று, அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்திலிருக்கும் அவருடைய பிரபலமான பிரசங்கத்தைப் பிரசங்கித்தார். முடிவிலே அவர்கள் உணர்வடைந்ததால், பேதுருவைப் பார்த்து, “நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டார்கள். முதல் முறையாக சபையைப் பார்த்து பாவிகள் தாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள்.

> இதை [பேதுருவின் செய்தியை] அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும்

பார்த்து, சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்றார்கள்.

அப்போஸ்தலர் 2:37

**தேவன் சொல்லுகிறதைக் கேட்கவும், அதைச் செய்யவும் ஆயத்தமாயிருக்கிற நிலைக்கு நீங்கள் வரும்போது, நீங்கள் செய்ய வேண்டியது இன்னது என்பதைக் குறித்து எந்த சந்தேகத்தோடும் தேவன் உங்களை விடமாட்டார். உங்களுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்வது கடினமானது அல்ல, அதைக் கேட்கவும், செய்யவும் ஆயத்தமாயிருக்கும் நிலைக்கு உங்களைக் கொண்டு வருவதுதான் கடினம்.**

**உண்மையான பாவ உணர்வு அடைந்த அந்த ஜனங்கள், "சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டவுடன், பேதுரு, தேவன் மற்றும் சபையின் தூதாக, அவர்களுக்கு தெளிவான, சரியான, செயல் முறையான ஒரு பதிலை கொடுக்கிறார்:**

பேதுரு அவர்களை நோக்கி, மனந்திரும்புங்கள். ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள்.

வசனம் 38

## மூன்று கட்ட செயல்முறை

**பேதுருவின் பதிலில் மூன்று கட்ட செயல்முறையைக் காண்கிறோம்.**

- **ஒன்று, மனந்திரும்பு.**
- **இரண்டு, தண்ணீரினால் ஞானஸ்நானம் பெறு.**
- **மூன்று, பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்.**

தேவனுடைய திட்டம் என்றைக்கும் மாறினதே இல்லை. இன்றைக்கும் பாவிகள் இதேதான் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இந்தச் செய்தியைத்தான் சபை கூறவேண்டும். மனந்திரும்பு, தண்ணீரினால் ஞானஸ்நானம் பெறு, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்.

இந்தச் செய்தி பிரசங்கிக்கப்படுகிற எந்த இடமானாலும், பெந்தேகோஸ்தே நாளில் நடந்தது போலவே நடக்கின்றது. மக்கள் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியையும் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அநேக முறை, ஞானஸ்நானம் பெற்று தண்ணீரிலிருந்து வெளியே வரும்போதே, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதை நான் பார்த்திருக்கிறேன்.

நாம் ஏன் அந்தச் செய்தியை குறைக்க வேண்டும்? அப்படிச் செய்ய நமக்கு அதிகாரமே இல்லை. நமக்கிருக்கும் ஒரே அதிகாரம், புதிய ஏற்பாட்டின் செய்தியை சொல்வதற்குத்தான்: மனந்திரும்பு, தண்ணீரில் ஞானஸ்நானம் பெறு, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள். நாம் செய்தியைக் கொடுக்கும் போது, தேவன் பதிலைக் கொடுக்கிறார். தேவன் மாறவில்லை, செய்தி மாறவில்லை. அநேக நேரங்களில் சபைதான் மாறிவிட்டது.

உங்களுக்கு அதிர்ச்சியூட்டும் ஒன்றை நான் சொல்கிறேன். அப்போஸ்தலர் நடபடிகளின் புஸ்தகம் தொடங்கி ஞானஸ்நானம் பெறாமல் இயேசுவிடமிருந்து, இரட்சிப்பைப் பெற்றதாக கூறும் ஒருவரைக் கூட நான் கண்டுபிடித்ததில்லை. உங்களால் கண்டுபிடிக்க முடியுமா என்று பாருங்கள். ஏனென்றால்

**இயேசு சொன்னார், "விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான்" (மாற்கு 16:16). "ஞானஸ்நானம் பெறுகிறவன்" என்ற வார்த்தைகளை நீக்க உங்களுக்கும் எனக்கும் என்ன அதிகாரம் உண்டு?**

**இரட்சிப்பு என்பது, விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவதாகும். இதைச் செய்தவுடன், பரிசுத்த ஆவியைப் பெற நீங்கள் தகுதியாகிவிட்டீர்கள். இதுதான் சபையின் செய்தி. தேவனைப் பொறுத்தவரையிலும் இது மாற்றப்படாத ஒன்று.**

## பவுலின் செய்தி

**புறஜாதிகளின் மாபெரும் அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்தை நாம் பார்ப்போம். அதுவும் அப்போஸ்தலரின் புஸ்தகத்தில்தான் எழுதப்பட்டிருக்கிறது. அறிவாற்றல் மற்றும் விக்கிரகம் நிறைந்த அத்தேனே பட்டணத்திற்கு பவுல் முதல் முதலில் சென்றார். முடிவில் அவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிறார். அதைச் செய்யும் நோக்கம் அவருக்கு இல்லை. ஆனால் அவர்கள் பவுல் விசுவாசித்தது என்னவென்று அறிய விரும்பும் சூழ்நிலை வந்தபோது அப்போஸ்தலர் 17ம் அதிகாரம் 30ம் வசனத்தில் தொடங்கி, அவர் அவர்களுக்கு அதை எடுத்துச் சொன்னார். அவர்கள் விக்கிரக ஆராதனையிலும், தேவனை அறியாமலும் வாழ்ந்த காலங்களைக் குறித்துப் பேசும்போது பவுல் சொல்லுகிறார்:**

> "அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்."
>
> அப்போஸ்தலர் 17:30

இந்த வசனம் மிகவும் தெளிவாக சொல்லுகிறது: எங்குமுள்ள மனுஷரெல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார். எந்த இடத்தையோ, நபரையோ அது விட்டு விடுகிறதில்லை. முழு மனுகுலத்திடமிருந்தும் தேவன் இதைத்தான் எதிர்பார்க்கிறார். நாம் மனந்திரும்பினால் கடந்த காலத்தைக் காணாதவரைப்போல இருக்க தேவன் ஆயத்தமாயிருக்கிறார்.

## நியாயாதிபதியாக இயேசு

அதற்கு பின் பவுல் தொடர்கிறார்:

"மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்..."

வசனம் 31

அப்போஸ்தலர்களின் பிரசங்கத்தின் மற்றொரு அம்சத்தை இங்கே நாம் கவனிக்கிறோம். இது பெரும்பாலும் தவிர்க்கப்படுகிறது: இயேசு இரட்சகர் மட்டுமல்ல அவர் நியாயாதிபதியாகவும் இருக்கிறார். இரட்சிப்பில் எவ்வளவு ஜாக்கிரதையும், சிறந்தவராயும் இருக்கிறாரோ, நியாயத்தீர்ப்பிலும் அப்படியே இருக்கிறார். அவரை இரட்சகராக சந்திக்காவிட்டால், அவரை நியாயாதிபதியாக சந்திப்போம்.

இதுவும் பிரசங்கங்களில் அதிகமாக விடப்படுகிற ஒரு கருத்து. இரட்சகரைக் குறித்துப் பேசுவார்கள். ஆனால் நியாயாதிபதியைக்

குறித்து ஒன்றும் சொல்ல மாட்டார்கள். அத்தேனே பட்டணத்தின் மக்களுக்குப் பவுல் அளித்த செய்தியில், இரட்சகரைக் குறித்து அவர் பேசவே இல்லை. அவர் சொன்னதெல்லாம் நியாயாதிபதியைக் குறித்துதான்.

இயேசு கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பை சந்திக்க வேண்டும் என்று மக்கள் அறியாதிருந்தால், அவர்கள் வித்தியாசமான வாழ்க்கை வாழ்வார்கள். கிறிஸ்தவர்களின் வாழ்க்கையிலே அதிகமான நிர்விசாரமும், கவனக்குறைவும் இருக்கிறதின் காரணம், அவர்கள் இயேசு இரட்சகர் மட்டுமல்ல அவர் நியாயாதிபதியாகவும் இருக்கிறார் என்பதை உணராததுதான். "தேவன் ஒரு நாளை குறித்திருக்கிறார்; அதிலே அவர் நீதியாய் உலகத்தை நியாயந்தீர்ப்பார்."

## முக்கிய பிரச்சனை — நீதி

நியாயத்தீர்ப்பின் மூல பிரச்சனை நீதி—நாம் எப்படி வாழ்ந்திருக்கிறோம், எப்படிப்பட்ட மக்களாய் இருந்திருக்கிறோம். நாம் எந்தச் சபை பிரிவைச் சேர்ந்தவர்கள், எந்த தேசத்தை சேர்ந்தவர்கள், நம்முடைய சமுதாய நிலை என்ன? என்பது அல்ல. நியாயத்தீர்ப்பில் ஒரே முக்கியமான காரியம்—நீதிதான்.

யோவான் எழுதின முதல் நிருபத்தில் அவர் சொல்லுகிறார், "எல்லா அநீதியும் பாவமாயிருக்கிறது" (1 யோவான் 5:17). நீதி என்றால் என்ன என்பதற்கான வரையறையை மக்கள் கேட்கலாம். இதற்கு உதாரணமாக, நீங்கள் கோணல் என்பதற்கு அர்த்தமறிய விரும்புகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நான் ஒரு கணித நிபுணனல்ல. ஆனால் நான்

உங்களுக்கு ஒரு நேர்க்கோட்டை காண்பித்து இதை விட்டு விலகி போவதெல்லாம் கோணல் என்று சொல்வேன். இது ஒரு டிகிரி விலகலாம் அல்லது தொண்ணூறு டிகிரி விலகலாம், ஆனால் அது கோணல்தான். அதேபோல் அநீதி எல்லாம் பாவமயிருக்கிறது. மூன்றாவது பிரிவு என்று ஒன்று இல்லை.

பல விசுவாசிகளுக்கு ஒரு மூன்றாவது பிரிவு உண்டு. அது நீதி அல்ல. ஆனால் பாவமுமல்ல. அப்படி ஒரு பிரிவு தேவனுடைய சிந்தையில் இல்லவே இல்லை. நீதியல்லாத எதுவும் பாவமே.

## பின்வாங்கவில்லை

அப்போஸ்தலர் 20ம் அதிகாரத்தில் எபேசுவில் பவுல் செய்த ஊழியத்தின் விவரத்தை காண்கிறோம். அங்கே தன்னுடைய ஊழியத்தில் சில மிகப்பெரிய பலன்களை அவர் கண்டிருந்தார். எபேசு திருச்சபையின் மூப்பர்களோடு அப்போஸ்தலர் 20ம் அதிகரத்தில் பேசி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டிருக்கிறார். அவர் சொல்லுகிறார், "நீங்கள் இனி இந்த உலகத்தில் என்னைக் காண மாட்டீர்கள்." அவர்கள் மேல் அன்பும், கரிசணையுமுள்ள ஒரு செய்தியை வைத்திருக்கிறார். எபேசுவில் தம்முடைய ஊழியத்தைக் குறித்து 20–21ம் வசனங்களில் சொல்லுகிறார்:

> "பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல்..."
>
> அப்போஸ்தலர் 20:20

நான் அடிக்கடி அந்த வார்த்தைகளை சிந்தித்ததுண்டு. "ஒன்றையும் நான் மறைத்துவைக்கவில்லை." அதற்கு அர்த்தம்

என்னவென்றால் சில சத்தியங்களை முழுமையாய் பிரசங்கிக்காமல் இருப்பதற்கு ஒரு நபருக்கு சில தூண்டுதல்கள் இருக்கலாம். அது அவருடைய சமுதாய அந்தஸ்த்திற்கு பாதகமாக இருக்கலாம். நீங்கள் ஒரு சபை பிரிவை சேர்ந்த ஊழியராயிருந்தால், அந்தச் சபையில் உங்களுக்கிருக்கும் ஸ்தானத்துக்குப் பாதகமாக இருக்கலாம். நீங்கள் சமுதாயத்தில் பெயர் பெற்றவர்களாயிருந்தால், உங்கள் செல்வாக்குக்குப் பாதகமாக அமையலாம். ஆகையால், பவுல் சொல்லுகிறார், "நான் இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து, எதுவும் இந்தச் செய்தியைத் தடுத்து நிறுத்தாது என்று தீர்மானம் செய்தேன்."

> "பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து உபதேசம்பண்ணி,"
>
> அப்போஸ்தலர் 20:20

எனக்கு அது மிகவும் பிடித்தது. பெரிய கூட்டமோ, சிறிய வீட்டுக்குழுவோ, பவுலின் செய்தி மாறவில்லை. அதே செய்திதான். அந்தச் செய்தி என்ன?

> "....தேவனிடத்திற்குமனந்திரும்புவதைக்குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக்குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்."
>
> வசனம் 21

முதல் வருவது என்ன? விசுவாசமா? மனந்திரும்புதலா? தேவனுக்கு நேராக மனந்திரும்புதல். "தேவனே நான் வருந்துகிறேன். நான் ஒரு பாவி. என் வாழ்க்கையை சுயமாய்

வாழ்ந்தேன்” என்று முதலாவது கூறுகிறீர்கள். அதற்குப்பின் வருகிறது இயேசுவின் மேல் விசுவாசம். “இயேசுவே நீர் என் ஸ்தானத்தை ஏற்றிக்கொண்டீரென்று நான் விசுவாசிக்கிறேன். சிலுவையில் எனக்காக மரித்தீர். என் பாவத்தை ஏற்றுக்கொண்டீர்” என்றுஅங்குதான்கூறுகிறீர்கள். ஆனால் தேவனுக்கு நேராக உண்மையான மனந்திரும்புதல் இல்லாமல் இயேசுவின்மேல் உண்மையான விசுவாசம் வைக்க முடியாது.

புதிய ஏற்பாடு இவ்விஷயத்தில் முரண்பாடற்றது. சபை மனந்திரும்ப வேண்டும். உண்மையான கிறிஸ்தவனாயிருப்பது என்றால் என்ன என்பதைக் குறித்து தவறான கருத்தைப் போதித்து, ஜனங்களுக்குச் சத்தியத்தை முழுமையாக போதிக்காமல அவர்களை வஞ்சித்ததற்காக சபை மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்புதல் இல்லாமல் உண்மையான கிறிஸ்தவனாய் மாற முடியாது. மனந்திரும்புதலில்லாமல் விசுவாசம் இல்லை.

## எங்குமுள்ள மனிதர் யாவரும்

எங்குமுள்ளோர், யாவரும் மனந்திரும்ப வேண்டுமென்று வேதம் சொல்லுகிறது (அப்போஸ்தலர் 17:30ஐ பாருங்கள்). ஏன் “எங்குமுள்ள மனிதர் யாவருமென்று” நீங்கள் கேட்கலாம். ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலிருந்து உங்களுக்கு நான் விடை அளிக்க விரும்புகிறேன்.

> நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். ஏசாயா 53:6

அதுதான் நம்முடைய பிரச்சனை. நாம் எந்த கொலையோ, விபச்சாரமோ செய்ததில்லை. திருடினதில்லை—ஒருவேளை பொய் சொன்னது கூட இல்லை. ஆனால் நாம் எல்லாரும் ஒரு காரியத்தை செய்திருக்கிறோம். அவனவன் தன் தன் வழியிலே போனோம். நம்முடைய வழி தேவனுடைய வழியல்ல. நம்முடைய சபை பிரிவு எதுவாயிருந்தாலும், எந்த இனத்தாராயிருந்தாலும், இது நம் எல்லாருக்குள்ளும் இருக்கிறது. நாம் எல்லாரும் நம்முடைய சொந்த வழிக்கு திரும்பியிருக்கிறோம்.

பிற்பாடு ஏசாயா சொல்லுகிறார்:

> நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் தேவன் அவர்மேல் [அதாவது, இயேசுவின் மேல்] விழப் பண்ணினார்.
>
> வசனம் 6

அக்கிரமம் என்பது மிக கடுமையான வார்த்தை. நம்முடைய வழிக்குத் திரும்புவதாகும். இது முழுக்க முழுக்க கலகம்—தேவனை விட என்னை முன்னிலைப்படுத்துவது. அதினால் தான் எங்குமுள்ள யாவரும் மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஏனென்றால் நாமெல்லாரும் நம்முடைய சொந்த வழிக்குத் திரும்பியிருக்கிறோம். நம் சொந்தக் காரியத்தைச் செய்து, நம்மை திருப்திப்படுத்த வாழ்ந்து, தேவனைச் சித்திரத்திலிருந்து அப்புறப்படுத்துகிறோம். தேவன் சொல்லுகிறார், “நான் உன்னை ஏற்றுக்கொள்ளுகிறேன், நீ மனந்திரும்பினால், இயேசு செய்த காரியத்தினாலே உன்னை மன்னிப்பேன்.” மனந்திரும்புதல்தான் அடிக்கோடு.

# மனந்திரும்புதல் தேவனிடத்தில் ஆரம்பிக்கின்றது

**நன்மையானதெல்லாம் தேவனிடத்தில் தான் ஆரம்பமாகிறது. நாம் எப்பொழுதுமே தேவ கிருபையைச் சார்ந்துதான் இருக்கின்றோம். தேவனுடைய கிருபையில்லாமல், அவருடைய ஆவியானவரின் அசைவாடுதலில்லாமல், நாம் மனந்திரும்ப முடியாது. 80ம் சங்கீதத்திலே இது மிகத் தெளிவாக காண்பிக்கப்பட்டிருக்கிறது. மூன்றுமுறை அதே வாக்கியம் இந்த சங்கீதத்தில் வருகிறது.**

> தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.
>
> வசனம் 3

> சேனைகளின் தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.
>
> வசனம் 7

> சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும்; உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.
>
> வசனம் 19

**எபிரேய மொழிபெயர்ப்பு ‘எங்களைத் திருப்பிக் கொண்டுவாரும்’ என்று கூறுகிறது—வேறுவிதமாகக் கூறினால், ‘எங்களை மனந்திரும்பச் செய்யும்’. இது மூன்று முறை மீண்டும் வலியுறுத்தப்படுகிறது: வசனங்கள் 3, 7, மற்றும் 19:**

எங்களைத் திருப்பிக் கொண்டுவாரும்...
அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.
எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும்...
அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.
எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும்...
அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.

**தேவன் உங்களைத் திருப்பினாலொழிய நீங்கள் மனந்திரும்ப முடியாது. திரும்புதல் தேவனிடத்தில் ஆரம்பமாகிறது. ஆகையால்தான் தேவன் நம்மை திருப்ப ஆரம்பிக்கின்ற நொடி மிகவும் மகத்தானது. ஏனென்றால் அதை உதறித் தள்ளி திரும்பினால், அதற்குப்பின் தனியாய் விடப்பட்டிருக்கிற நாம் மனந்திரும்ப முடியாது. மனந்திரும்புதலின் கிரியையை ஆரம்பிப்பதற்கு நாம் தேவனையே சார்ந்திருக்கிறோம்.**

**மறுபடியும் 'எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும்'**

**தேவனுக்கு விரோதமாக தொடர்ந்து கலகம் பண்ணினதினால், எருசலேம் அழிக்கப்பட்டதற்காக, எரேமியாவின் துக்கம் கொண்டாடுதல்தான் புலம்பலின் புஸ்தகம். புலம்பல் 5:21ல், "எங்களைத் திருப்பிக்கொள்ளும்" என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது, 80ம் சங்கீதத்திலும் அதே வார்த்தைதான் பயன்படுத்தப்படுகிறது:**

கர்த்தாவே எங்களை உம்மிடத்தில் திருப்பிக் கொள்ளும் அப்பொழுது திரும்புவோம். [அல்லது சீரமைக்கப்படுவோம்]

புலம்பல் 5:21

**வேறுவிதமாகக் கூறினால், எரேமியா ஜெபிக்கிறார்: 'ஆண்டவரே, தயவுசெய்து எங்களைத் திருப்பும், நாங்கள் திரும்புவோம்.'**

இது மிகவும் கனமான சிந்தனை. தேவன் உங்களைத் திருப்பத் தொடங்கும்வரை நீங்கள் திரும்ப முடியாது. அதனால்தான் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தேவன் மனந்திரும்புதலின் செயல்முறையைத் தொடங்கும்போது இது ஒரு முக்கியமான தருணம்.

இராணுவத்தில் என் தோழனாக இருந்த ஒரு வாலிபனை நான் அறிவேன். நான் இரட்சிக்கப்பட்ட போது அவன் மட்டும்தான் சாட்சி. என் வாழ்வில் நடந்த மாற்றத்தைக் குறித்து அவன் அறிந்திருந்தான். பின்பு அதே இராணுவப் பிரிவில் நான் ஒரு வேதபாட வகுப்பை ஆரம்பித்தேன். நான் நினைத்தேன், நான் ஏதாவது செய்ய வேண்டும். வேதபாட வகுப்பு நடத்துவது குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது. எங்கே ஆரம்பிப்பது என்று தெரியவில்லை. நான் நினைத்தேன், புதிய ஏற்பாட்டில் முதல் அதிகாரத்தில் ஆரம்பிக்கலாம். இயேசு கிறிஸ்துவின் அட்டவணையில் ஆரம்பித்தேன்.

என்னுடன் இராணுவத்தில் இருந்து நான்கு அல்லது ஐந்து வீரர்கள் வந்தார்கள். இது வடக்கு ஆப்பிரிக்க வனாந்திரத்தில் நடந்தது. திடீரென்று இந்த நண்பன் வந்து சொன்னான், “என்னை மன்னித்துவிடு, இனி நான் உன் வேதபாட வகுப்புக்கு வர மாட்டேன்.” நான் கேட்டேன், “ஏன்?” அவன் சொன்னான், “நான் தொடர்ந்து வந்தால் மாறிவிடுவேன்.”

பல ஆண்டுகள் கழித்து அவனை மிகவும் வித்தியாசமான சூழ்நிலையில் சந்தித்தேன். நான் அறிந்திருந்த எந்த நபரிலும் மிகவும் மோசமான சூழ்நிலையில் இருந்தான்! தமக்கு உதவி

செய்யுமாறு என்னைக் கெஞ்சினான். அவனுக்கு உதவி செய்யும் படி என்னால் இயன்றது எல்லாவற்றையும் செய்தேன். தேவனிடத்தில் மக்களை வழி நடத்துவதில் நான் மிகவும் அனுபவமுள்ளவன். ஆனாலும் என்னால் அவனுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் மனைவிக்கு உதவி செய்தேன், அவள் இரட்சிக்கப்பட்டாள். அவனுடைய முடிவு என்ன என்று அறியேன். ஆனால் இது எனக்கு ஒரு பயங்கரமான பாடமாக அமைந்தது. கிறிஸ்துவுக்குள் மாறுவதற்கு நான் அவருக்கு உதவ வேண்டும் என்று அவர் விரும்பினார். என்னால் முடியவில்லை, அவர் மாறவுமில்லை.

நீங்கள் நினைக்கும்போது திரும்பலாம் என்று நினைக்கிறீர்கள். நீங்கள் சொல்லலாம், "தேவனே நான் மிகவும் வேலையாய் இருக்கிறேன், அப்புறமாக வாரும்." ஆனால் நீங்கள் அதைச் செய்ய முடியாது. என் நண்பன் திரும்ப நினைத்த போது திரும்ப முடியவில்லை.

தேவன் அவனோடு பேசின நேரம் அவனுக்கு இரட்சிப்பை ஏற்றுக்கொள்ள மனதில்லை. அவன் இரட்சிப்பை விரும்பினபோது, தேவன் அவனிடத்தில் பேசவில்லை. அவன் முடிவு என்னவோ யாருக்குத் தெரியும்?

## மனந்திரும்பு அல்லது மடிந்து போ

மனந்திரும்புதலுக்கு ஒரே மாற்று வழிதான் உண்டு, அது மடிந்து போவதாகும். வேதம் லூக்கா 13ம் அதிகாரத்தில் கூறுகிறது:

> பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான்;

அந்த வேளையிலே அங்கே இருந்தவர்களில் சிலர் அந்தச் செய்தியை அவருக்கு அறிவித்தார்கள்.

லூக்கா 13:1

**அவர்கள் பலி செலுத்திக்கொண்டிருந்த போதே பிலாத்து அவர்களைக் கொன்றான். அது அவர்களுக்கு நன்மையாக எண்ணப்படும் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக:**

**...**அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே, மற்ற எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள். சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே; எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள் குற்றவாளிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்**...**

வசனம் 2 — 5

**இரண்டே வழிகள்தான் இருக்கின்றது. மனந்திரும்பு அல்லது மடிந்து போ. இது இயேசுவின் சொந்த வார்த்தைகள்.**

## மனந்திரும்புதல்—விசுவாசத்திற்கான வழி

**விசுவாசத்தின் தன்மையைக் குறித்து நாம் சற்று தியானிப்போம். இது மனந்திரும்புதலின் முன்னேற்ற விளைவாகும். ரோமர் 10:17**

சொல்லுகிறது "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வார்த்தையினாலே வரும்." அது ஒரு முக்கியமான கோட்பாடு.

வேதத்திலே சொல்லப்பட்ட "விசுவாசம்" எப்பொழுதுமே தேவனுடைய வார்த்தையில் வைக்கும் விசுவாசத்தைத் தான் குறிக்கும். விசுவாசம் ஒரே ஒரு ஊற்றிலிருந்துதான் வருகிறது: தேவனுடைய வார்த்தை. அதற்கு ஒரே குறிக்கோள் தான் இருக்கிறது: தேவனுடைய வார்த்தை.

நாம் சமகாலத்து ஆங்கிலத்தில், "என் மருத்துவர் மீது எனக்கு பெறும் விசுவாசம் இருக்கிறது" என்று சொல்லலாம். அல்லது ஒரு அரசியல் கட்சியிலோ, மருந்திலோ, உணவிலோ விசுவாசமுண்டென்று சொல்லுவோம். அது சரியானதுதான். அந்த வார்த்தைகளை பயன்படுத்துவதில் தவறு எதுவுமில்லை. ஆனால் அது வேதத்தின் அடிப்படையில் பயன்படுத்தும் விசுவாசம் அல்ல. வேதத்தில் விசுவாசம் எப்போதும் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் தான் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையை அடிப்படையாக கொண்டிராத எந்தக் காரியமும் வேதத்தின் அடிப்படையிலான விசுவாசமல்ல.

## விசுவாசம் மற்றும் நம்பிக்கை

எபிரேயர் 11ல் விசுவாசத்தின் விளக்கத்தை காண்கிறோம். உண்மையில்,வேதம்வரையறுக்கும் ஒரே வார்த்தை இதுதான் என்று நான் நினைக்கிறேன்; வேதத்தில் வரையறுக்கப்பட்டுள்ள வேறொரு வார்த்தையை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.

எபிரேயர் 11:1

**விசுவாசத்திற்கும், நம்பிக்கைக்கும் தொடர்புண்டு. அநேகர் தங்களுக்கு விசுவாசம் உண்டென்று நினைக்கும்போது, உண்மையில் அவர்களுக்கு நம்பிக்கைதான் இருக்கிறது என்று நான் கண்டுபிடித்தேன். விசுவாசம் இங்கேயும், இப்போதுமாய் இருக்கிறது; நம்பிக்கை எதிர்காலத்திற்குரியது. நம்பிக்கை என்பது ஒரு பொருள்—அது உண்மையில் ஒரு பொருள் என்று அழைக்கப்படும் அளவுக்கு உண்மையான ஒன்று. விசுவாசத்தின் அடிப்படையில், வருங்காலத்துக்கான முறையான நம்பிக்கை வைக்கமுடியும். ஆனால் முறையான விசுவாசத்தை அடிப்படையாக கொண்டிராத எந்த நம்பிக்கையும், ஆசை நிறைந்த கற்பனையாயிருக்கிறது.**

**விசுவாசம் நம்முடைய இருதயங்களில் இருக்கிறது என்பதை உணருவது அவசியம். உண்மையில், விசுவாசம் என்பது நம் இருதயத்தில் ஒரு பொருள். அது இப்போது இங்கே இருக்கிறது.**

என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைப்பண்ணப்படும்.

ரோமர் 10:9-10

**வேதத்தின் அடிப்படையிலான விசுவாசம் மனதில் இல்லை, இருதயத்தில் இருக்கிறது.**

# இருதயத்தில் விசுவாசம்

புதிய ஏற்பாட்டில், நம்பிக்கை என்பது அசைதலுள்ள ஒரு வார்த்தை: இது ஒரு நிலையான காரியம் அல்ல. நம்பிக்கை வெறுமனே அறிவுசார் நிலைப்பாட்டை எடுப்பதும் அல்ல. அது உங்களைப் புதிய விஷயத்திற்கு அழைத்துச்செல்லும், இருதயத்தில் உள்ள ஒன்று. நம்பிக்கை போலவே, விசுவாசம் என்பதும் அசைதலுள்ள வார்த்தை. விசுவாசத்தினால் நாம் இரட்சிப்புண்டாக நம்புகிறோம். நீங்கள் அறிவாற்றலான விசுவாசம் வைத்திருந்தும் மாற்றப்படாமலேயே இருக்கலாம். நீங்கள் வேதத்தில் இருக்கிற எல்லா உபதேசங்களையும் அறிவாற்றலினால் ஏற்றுக்கொண்டும் மாற்றமே இல்லாமல் அப்படியே இருக்கலாம். ஆனால் நீங்கள் இருதயத்தில் விசுவாசம் வைத்திருக்கும் போது, இது இரட்சிப்புக்கு நேராக நடத்துகின்றது.

விசுவாசம் தற்காலத்தில் இருக்கின்றது; நம்பிக்கை வருங்காலத்தில் இருக்கின்றது. விசுவாசம் இருதயத்தில் இருக்கின்றது; நம்பிக்கை மனதில் இருக்கின்றது.

1 தெசலோனிக்கேயரில் பவுல் இரண்டையும் குறித்து பேசுகின்றார். மிக அருமையான ஒரு உதாரணத்தை அவர் பயன்படுத்துகிறார்.

> பகலுக்குறியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம், அன்பு என்னும் மார்க்கவசத்தையும்,இரட்சிப்பின் நம்பிக்கையாகிய தலைச்சீராவையும் தரித்துகொண்டிருக்கக்கடவோம்
>
> 1 தெசலோனிக்கேயர் 5:8

இங்கே சர்வாயுதவர்க்கத்தின் இரண்டு பொருட்களைப் பார்க்கிறோம்: மார்க்கவசம் மற்றும் தலைச்சீரா. விசுவாசம் மார்க்கவசம்,

அது இருதயத்தைப் பாதுகாக்கிறது. நம்பிக்கை ஒரு தலைச்சீராவாய் இருக்கிறது, அது தலையைப் பாதுகாக்கிறது. விசுவாசம் இருதயத்தில் இருக்கிறது, நம்பிக்கை மனதில் இருக்கிறது.

நம்பிக்கை மிக முக்கியமானது. ஏனென்றால் ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனும் எப்பொழுதும் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையுடையவனாய் இருக்க வேண்டும். நீங்கள் தீங்குதான் நடக்கும் என்று இடைவிடாமல் நினைக்கிறவர்களாய் இருந்தால், உண்மையைச் சொன்னால் நீங்கள் உங்கள் விசுவாசத்தை மறுதலிக்கிறீர்கள்.

நம்பிக்கையை நான் இப்படி விளக்குவது உண்டு: தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில், நன்மையையே எதிர்ப்பார்க்கும், ஒரு தொடர் எதிர்பார்ப்பு. உண்மையான கிறிஸ்தவனாய் இருக்கிற நாம் ஒவ்வொருவரும், எப்பொழுதும் நல்லது நடக்கும் என்ற உறுதியான எதிர்பார்ப்பு உடையவர்களாய் இருக்கிறோம். ஏனென்றால் இந்த வாழ்க்கையில் என்ன நடந்தாலும், நாம் என்றென்றும் தேவனோடு இருக்கப்போகிறோம். இது உங்கள் நம்பிக்கையாயிருந்தால், நீங்கள் சோர்ந்து போகலாம், நீங்கள் பெலனற்றுப் போகலாம். ஆனால் நீங்கள் விட்டு விடமாட்டீர்கள். ஏனென்றால் உங்களுக்கு நம்பிக்கையுண்டு. விசுவாசத்தின் மேல் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நம்பிக்கை.

## நான்கு விசுவாச அறிக்கைகள்

விசுவாசத்தை குறித்த சில அறிக்கைகளுக்காக நாம் எபிரேயர் 11ஐ

**திரும்ப பார்ப்போம். ("மாபெறும் விசுவாசத்தின் அத்தியாயம்' என்று அழைக்கப்படும் மிக அருமையான ஒரு அதிகாரம் எபிரேயர் 11.)**

## 1. விசுவாசம் காணப்படாததுடன் தொடர்புடையது:

> விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.
>
> எபிரேயர் 11:3

**விசுவாசம் காணப்படாதவைகளோடு நம்மைத் தொடர்பு கொள்ளச் செய்கிறது என்பதை நாம் முக்கியமாக புரிந்துகொள்ள வேண்டும். விசுவாசம் காணப்படுகிறவைகளின் மேல் நிலைபடுத்தப்பட்டதல்ல. விசுவாசம் புலன்களின் தளத்திற்கு அப்பால் நம்மை காணப்படாதவைகளின் தளத்திற்கு அழைத்துச் செல்கிறது.**

**2 கொரிந்தியர் 5:7இல் பவுல் சொல்லுகிறார்,**

> "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்." இவ்விரண்டும் மாற்றுக்கருத்துக்கள் என்பதை கவனியுங்கள். நீங்கள் காணும்போது, விசுவாசிக்க தேவையில்லை. காணாதபோது தான் விசுவாசிப்பது அவசியம். பவுல் சொல்லுகிறார், "தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்." காண்கிறவைகளைக்கொண்டு நாம் நடக்கிறதில்லை. விசுவாசிக்கிற்தைக் கொண்டு நாம் நடக்கிறோம்.

**லாசருவின் கல்லறைக்கு வெளியே, இயேசு மார்த்தாளுக்குச் சொல்லுகிறார்:**

"இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்."

யோவான் 11:40

இயேசுவைப் பொறுத்தவரை எது முதலில் வருகிறது — விசுவாசக்கிறதா? அல்லது காண்கிறதா? எத்தனையோ மக்கள் "நான் பார்க்கும் போது விசுவாசிக்கிறேன்" என்று சொல்லுவார்கள். ஆனால், அது உண்மையல்ல. ஏனென்றால் நீங்கள் காணும்போது விசுவாசிக்க அவசியம் இல்லை. காணாதபோதுதான் நீங்கள் விசுவாசிக்க வேண்டும். "தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்."

நான் அநேக ஜனங்களை சந்தித்திருக்கிறேன். அவர்கள், "அய்யோ, நான் காணக்கூடுமானால் விசுவாசிப்பேனே" என்று சொல்லுவார்கள். ஆனால் அது உண்மையல்ல, நீங்கள் விசுவாசிக்க அங்கே தேவையே இல்லை. நீங்கள் காணக்கூடாமல் இருக்கும் போதுதான் விசுவாசிப்பது அவசியமாயிருக்கும். "தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்."

## 2. விசுவாசம் முதன்மையான குணம்

கிரேக்க, எபிரேய மூல பாஷைகளில் விசுவாசம் முதன்மையாக ஒரு உபதேசமாய் இராமல், ஒரு நற்குணமாய் இருக்கிறது. நம்முடைய சுவிசேஷ மைய சிந்தையிலே இதைத் தவறாக புரிந்துகொண்டுள்ளோம். நாம் விசுவாசத்தைக் குறித்துப் பேசும்போது, அதை அறிவாற்றலினாலே நாம் கடைப்பிடிக்கின்ற போதகங்கள் என்று கூறுகிறோம். ஆனால், முதன்மையாக விசுவாசம் நற்குணத்தின் விஷயமாக இருக்கிறது.

எபிரேய வார்த்தையாகிய எமுனா, கிரேக்க வார்த்தையாகிய பிஸ்டாஸ், இவ்விரண்டிற்கும் இது உண்மையாக இருக்கிறது. இரண்டுமே, "உண்மை, நம்பிக்கைக்கு பாத்திரமாய் இருப்பது, ஒப்புக்கொடுத்தல்" என்ற முதன்மையான அர்த்தங்களை உடையதாயிருக்கிறது.

இயேசு தன்னுடைய சீஷர்களிடம், "எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடு நிலைத்திருந்தவர்கள் நீங்களே" (லூக்கா 22:28) என்று கூறினார். அதுதான் விசுவாசம். இயேசுவோடு தொடர்ந்து நிலைத்திருப்பது. ஒரு நபருக்கு நம்மை ஒப்புக்கொடுத்தலாகும்.

## 3. விசுவாசம் அறிக்கையைக் கொண்டுவரும்

விசுவாசத்தை நாம் அறிக்கையிடும்போது, பிரதான ஆசாரியனாகிய இயேசுவோடு நம்மை இணைக்கின்றது.

> ...நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்;
>
> எபிரேயர் 3:1

மிக முக்கியமான அந்த உண்மையை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். இயேசு நம்முடைய அறிக்கையின் பிரதான ஆசாரியராயிருக்கிறார். நீங்கள் அறிக்கை செய்தால், அவர் உங்களுடைய பிரதான ஆசாரியர். நீங்கள் மௌனமாய் இருந்தால் அவர் உங்கள் பிரதான ஆசாரியனாயிருக்க முடியாது. அதனால்தான் உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்வது முக்கியமாக இருக்கிறது.

> வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம்.
>
> எபிரேயர் 4:14

**நாம் அறிக்கையிடுகிறோம், சோதிக்கப்படுகிறோம். ஆனால் பற்றிக்கொண்டிருக்கிறோம். நாம் பற்றிக்கொண்டிருக்கும் வரையிலும் இயேசு நம்முடைய பிரதான ஆசாரியராய் இருக்கிறார்.**

**எபிரேயர் 10 இன்னும் ஒரு அடி நம்மை முன்னே அழைத்துச் செல்கிறது.**

> தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும்,...அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்;...
>
> எபிரேயர் 10:21, 23

**கவனியுங்கள் நாம் நம்பிக்கையிலிருந்து, விசுவாசத்திற்கு முன்னேறியிருக்கிறோம். நம்முடைய விசுவாசத்தை அடிப்படையாக கொண்டிருக்கும் ஒரு நம்பிக்கை நமக்கு உண்டு. நம்முடைய விசுவாசத்தை நாம் அறிக்கையிடுகிறோம். இப்போது நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறோம்.**

**எபிரேயர் 10:23, "அசைவில்லாமல்" என்று சொல்லுகிறது. ஏன் அப்படிச் சொல்லுகிறது? ஏன் நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் உறுதியாயிருப்போம் என்று சொல்லுகிறது? காரணம் என்னவென்றால், நம்மை எதிர்ப்பதற்கு அநேக சக்திகள் இருக்கும், பல அழுத்தங்கள்**

**நமக்கு விரோதமாக வரும், நம்மைச் சோர்வடையச் செய்யவும், விசுவாசத்தை மட்டுப்படுத்தவும் அநேக காரியங்கள் தேடி வரும். விசுவாச வாழ்க்கை உறுதி மற்றும் சகித்தலின் யுத்தமாக இருக்கிறது. இதில் நமது கடமை 'அசையாதிருப்பது.'**

## 4. விசுவாசம் சோதிக்கப்படும்

**இறுதியாக விசுவாசம் சோதிக்கப்படும் என்று நான் உங்களுக்குச் சொல்லத்தான் வேண்டும். சோதிக்கப்படாத விசுவாசம் தேவனுடைய பார்வையில் விலைமதிப்புள்ளதல்ல. இயேசு எபேசு சபைக்குச் சொன்னார்:**

> "...நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும்,... என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், ...உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்."
>
> வெளிப்படுதல் 3:18

**அதுதான் சோதனையில் நிலைத்திருக்கும் விசுவாசம். பழுங்காலங்களில் அக்கினியினாலே சோதிக்கப்படாத பொன் எதற்குமே பிரயோஜனமற்றதாக எண்ணப்பட்டது. சோதிக்கப்படாத விசுவாசம் தேவனால் மதிக்கப்படுகிறதில்லை.**

## சகிப்புத்தன்மைக்கான நேரம்

**முடிவில், யாக்கோபு 1:2–4ஐ மேற்கோள் காட்டுகிறேன்:**

> என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள்

ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.

**நீங்கள் பூரணராகவும், நிறைவுள்ளவர்களாகவும் இருக்க வேண்டுமா? சகித்தல் உங்களுக்குள் "பூரண கிரியை" செய்ய அனுமதிக்க வேண்டும். அதுதான் நீங்கள் கடந்து வரும் சோதனை. பேதுரு இன்னொரு இடத்தில் சொல்லுகிறார்:**

...பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.

1 பேதுரு 1:6-7

**கடைசியாக நான் ஒரு வார்த்தையை உங்களுக்குச் சொல்கிறேன். இதை நான் சொல்லாமல் இருந்தால் நலமாயிருந்திருக்கும் என்று உங்களுக்கு நினைக்கத்தோன்றும்: உங்கள் விசுவாச நடையில் சகிப்புத்தன்மையைக் கற்றுக்கொள்ள ஒரே ஒரு வழி இருக்கிறது. அது சகித்துக்கொள்வதன் மூலம் மட்டும்தான். ஆனால் நாம் சகித்துக்கொண்டு, நம்முடைய விசுவாசத்தின் சோதனையை வெற்றிகரமாக கடந்து வரும்போது, நாம் எதற்காகப் படைக்கப்பட்டோமோ அதை நிறைவேற்றுவோம். நம் வாழ்வு நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குப் புகழையும், கனத்தையும், மகிமையையும் கொண்டு வரும்.**

பிதாவே, விசுவாசம் என்னில் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் என் பாவங்களை விட்டுத் திரும்புகிறேன். நான் அவைகளை விட்டு விலகி உம்மை நோக்கித் திரும்புகிறேன். நான் சில வழிகளில் உம்மை வருத்தப்படுத்தினேன் என்பதை இப்போது ஒப்புக்கொள்கிறேன். (அவைகளைக் குறிப்பிடவும்). என்னைச் சுத்திகரிக்கவும், என்னில் நீர் தொடங்கிய கிரியையை முடிக்கவும் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன். சோதனைகளில் விட்டுவிடாமல் இருக்க எனக்கு உதவி செய்யும். அதனால் நான் சோதிக்கப்படும்போது நான் முழுமையானவனாகவும்,நிறைவானவனாகவும், ஒன்றும் குறையாதவனாகவும் காணப்படுவேன். இதை நான் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

ஆமென்.

# எழுத்தாளரைப் பற்றி

டெரிக் பிரின்ஸ் (1915–2003) பிரிட்டிஷ் பெற்றோருக்கு இந்தியாவில் பிறந்தார். இங்கிலாந்தின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழி அறிஞராகப் படித்த அவர், கிங்ஸ் கல்லூரியில் பண்டைய மற்றும் நவீன தத்துவத்தில் பெல்லோஷிப்பைப் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் ஜெருசலேமில் உள்ள எபிரேய பல்கலைக்கழகத்தில் எபிரேய மற்றும் அராமிய மொழிகளை உள்ளிட்ட பல நவீன மொழிகளைக் கற்றார்.

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றிய போது, அவர் வேதத்தைப் படிக்கத் தொடங்கினார் மற்றும் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு வாழ்க்கையை மாற்றும் அனுபவத்தைப் பெற்றார். இந்த சந்திப்பில் இருந்து அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலில், இயேசு கிறிஸ்து உயிருடன் இருக்கிறார்; இரண்டாவதாக, பைபிள் ஒரு உண்மையான, பொருத்தமான, தற்காலத்திற்கு ஏற்ற புத்தகம். இந்த முடிவுகள் அவருடைய வாழ்க்கையின் முழு போக்கையும் மாற்றியது, பின்னர் அவர் பைபிளைப் படிப்பதிலும் கற்பிப்பதிலும் தன்னை அர்ப்பணித்தார்.

பைபிளையும் அதன் போதனைகளையும் தெளிவாகவும் எளிமையாகவும் விளக்கும் டெரிக்கின் முக்கிய வரம், மில்லியன் கணக்கான உயிர்களில் நம்பிக்கையின் அடித்தளத்தை உருவாக்க உதவியது. அவரது சபை பிரிவு சார்பற்ற, பிரிவினைவாதம் இல்லாத அணுகுமுறை அவரது போதனையை அனைத்து இன மற்றும் மத பின்னணியிலிருந்தும் மக்களுக்குச் சமமாக

பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்கியுள்ளது.

அவர் 80 க்கும் மேற்பட்ட புத்தகங்கள், 600 ஆடியோ மற்றும் 110 வீடியோ போதனைகளின் ஆசிரியர் ஆவார், அவற்றில் பல, 100க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவரது தினசரி வானொலி ஒலிபரப்பு அரபி, சீன (அமோய், கான்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், ஸ்வாடோ), குரோஷியன், ஜெர்மன், மலகாஸி, மங்கோலியன், ரஷ்யன், சமோவான், ஸ்பானிஷ், பஹாசா இந்தோனேசிய மற்றும் டோங்கன் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வானொலி நிகழ்ச்சி தொடர்ந்து உலகம் முழுவதும் பலரைச் சென்றடைகிறது.

டெரிக் பிரின்ஸ் மினிஸ்ட்ரீஸ் அவரது போதனைகளுடன் 140க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள விசுவாசிகளை சென்றடைவதைத் தொடர்கிறது, 'இயேசு திரும்பும் வரை' தொடர வேண்டும் என்ற ஆணையை நிறைவேற்றுகிறது. ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, மியான்மர், நேபாளம், நெதர்லாந்து, நியூசிலாந்து, நார்வே, பாகிஸ்தான், ரஷ்யா, தென்னாப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, யுனைடெட் கிங்டம், அமெரிக்கா மற்றும் பசிபிக் தீவுகள் ஆகிய நாடுகளில் உள்ள முதன்மைப் பணிகள் உட்பட, உலகெங்கிலும் உள்ள 30க்கும் மேற்பட்ட டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இது செயல்படுத்தப்படுகிறது. இவை மற்றும் பிற உலகளாவிய இருப்பிடங்களைப் பற்றிய தற்போதைய தகவலுக்கு,

இங்கு செல்க:www.derekprince.com

**உங்கள் ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப, புத்தகங்கள் வாங்க மற்றும் இதர காரியங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

For orders, prayer requests & other enquiries
please contact :

DERER PRINCE MINISTRIES - INDIA
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

**உங்கள் காணிக்கைகளையும், நன்கொடைகளையும் மேலிருக்கும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

You can also send your offerings and contributions
towards this ministry to the above address.

**Visit our WEBSITE:**
***www.derekprince.com/ta***